ஏற்கெனவே நான் அறிவித்ததைப் போல, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மதிய உணவு விருந்து கொடுக்கின்றார்கள் என்பதை மீண்டும் ஒரு முறை அறிவிக்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(29-1-1998)* காலை *9.30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-18 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

139. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 23-12-1997 ஆம் நாளிட்ட 31ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

140. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 4-2-1998 ஆம் நாளிட்ட 23ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

129. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (4-வது படிவத்தின்படி) மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் என்ற புத்தகம். (தமிழ்)